# பொருளியல்


## 1.0 - கடந்தகால பல்தேர்வு வினாக்கள்



# கடந்தகால பல்தேர்வு வினாக்கள்

பின்வருவனவற்றில் பொருளியில் ரீதியாக பௌரீதியான தேவை என்பதனுள் உள்ளடங்கும் சேர்க்கை யாது?

1. உணவு, அன்பு, வீடு
2. அன்பு, ஆடைகள், உணவு
3. உணவு, உடை, வீடு
4. அன்பு, கருணை, பாசம்
5. உடை, வீடு, பாசம்



பொருளியல் ஆனது ஏனைய இயற்கை விஞ்ஞானத்தில் இருந்து வேறுபட காரணமாக அமையாதது?

1. மனித நடத்தை பற்றி ஆய்வு செய்கின்றது
2. ஆய்வு கூடங்களில் உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல்
3. பிரதேசரீதியாக, சமூகரீதியாக வேறுபடக் கூடியது
4. அகவயத் தன்மை அதிகம் வாய்ந்தது
5. காலம், பிரதேசம் தொடர்பில் மாற்றப்படக் கூடியது



பின்வருவனவற்றில் நுண்பாக பொருளியலில் உள்ளடங்காத விடயம் யாது?

1. சந்தையில் நுகர்வோர் நடத்தை
2. வேலை வாய்ப்பு மட்டம்
3. நிறுவனம் ஒன்றின் உற்பத்தி போக்கு
4. அருமை பற்றிய விளக்கம்
5. நுகர்வோரின் தெரிவு



நேர்கூற்றுக்கான பொருத்தமான கூற்று ஒன்றாக அமையாதது எது?

1. விலைக்கும் நிரம்பல் தொகைக்கும் இடையே நேர்த் தொடர்பு உண்டு
2. இலங்கையின் அண்மைக்கால வேலையின்மை 4.2மூ ஆகும்
3. வருமானம் அதிகரிக்க கேள்வி அதிகரிக்கின்றது
4. வளர்முக நாடுகளின் விருத்திக்கு வெளிநாட்டு உதவி வேண்டும்
5. 2017 இல் அதிகூடிய வறிய மாவட்டம் கிளிநொச்சியாகும்



**தொகுப்பு** : திரு.E.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பொருளியலில் மீளமைக்க முடியாத வளங்களில் ஒன்று

1. பயிர்ச்செய்கை நிலம்
2. கடல் வளம்
3. வன விலங்குகள்
4. கனிய வளம்
5. மரங்கள்

பின்வருவனவற்றுள் பௌதீக வளமாகக் கொள்ளக் கூடியது எது?

1. நிலம், முயற்சி
2. நிலம், ஊழியம்
3. நிலம், மூலதனம்
4. மூலதன்ம், முயற்சி
5. உழைப்பு, முயற்சி

பொருளாதார பொதுச் செயற்பாட்டு மூலதன வகுதிக்குள் பின்வருவனவற்றுள் எதனைக் குறிப்பிடுவீர்?

1. துறைமுகங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், வைத்தியசாலை, ஆய்வுகூடங்கள்
2. விமானநிலையம், துறைமுகம், மேம்பாலங்கள்
3. விமானநிலையம், பாடசாலை கணினி நிலையம், துறைமுகம்
4. வைத்தியசாலை தொழிநுட்ப உபகரணம், துறைமுகம், பாடசாலைக் கட்டிடங்கள்
5. அறுவை சிகிச்சை நிலையம், துறைமுகம், பாடசாலைக் கட்டிடம்

பின்வருவனவற்றுள் எது நிலத்தின் பண்பன்று?

1. அசையும் தன்மை இல்லாதது
2. நிரம்பல் நெகிழ்வற்றதாக இருத்தல்
3. ஓரினத்தன்மையற்றதாக அமைதல்
4. தீர்மானம் மேற்கொள்ளவும் ஒழுங்கமைக்கவும் முடிதல்
5. இயற்கையின் அருங்கொடையாகவிருத்தல்

பின்வருவனவற்றுள் ஊழிய வளத்தின் அளவினைத் தீர்மானிக்கும் காரணியல்லாதது எது?

1. சனத்தொகையின் அளவு
2. மக்களின் சுகாதார நிலை
3. மக்களின் கல்வி மட்டம்
4. தொழிற்பயிற்சி ஆய்வு
5. உற்பத்திச் செலவுகளும், உற்பத்தியும்

**தொகுப்பு** : திரு.E.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பின்வருவனவற்றுள் எக்கூற்று சரியானதாகும்

1. நிலம் என்பது இயற்கை மூலதனமாக மட்டும் கருதப்படக்கூடியது
2. கனிய வளங்கள் மீளா வளங்களுக்கு ஓர் உதாரணமாகும்
3. மூலதனமானது பெறுமானத் தேய்விற்கு உட்படுவதன்று
4. முயற்சியாண்மை எதிர்பார்க்கும் குறைந்தபட்ச வெகுமதி பொருளியல் இலாபத்திற்க்குச் சமனாகும்
5. முதலீடு என்பது மூலதனமாகும்



தாராள சந்தைப் பொருளாதாரமொன்றில் எதனை உற்பத்தி செய்வது என்ற பொருளாதாரப் பிரச்சினை தீர்மானிக்கப்படுவது?

1. திட்டமிடல் குழு முறைமையொன்றினாலாகும்
2. அரசாங்க அறிவுறுத்தல்களினாலாகும்
3. பகுதியளவில் சந்தை சக்தியாலும் பகுதியளவில் அரசினாலும் ஆகும்
4. நுகர்வோர் கேள்வி மற்றும் உற்பத்தியாளரது நிரம்பலினாலாகும்
5. நுகர்வோரினதும் அரசாங்கத்தினதும் கூட்டுத் தீர்மானத்திலாகும்



பொருளியல் அருமைத் தன்மை என்பது

1. வளங்கள் மாற்றுப் பயன்பாடுகளுடன் ஒப்பிடும் போடு பற்றாக்குறையாக அமைவது
2. வரையறுக்கப்படாத தேவைகளுடன் ஒப்பிடுமிடத்து வளங்கள் குறைவாகவிருத்தல்
3. வரையறுக்கப்பட்ட விருப்பங்களுடன் ஒப்பிடும் போது வளங்கள் பற்றாக்குறையாகவிருத்தல்
4. வரையறுக்கப்படாத மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் போது உற்பத்தி வளங்கள் பற்றாக்குறையாகவிருத்தல்
5. தேவைகளும் விருப்பங்களும் வரையறையற்றதாகவும் வளங்கள் அதிகமாகவும் இருத்தல்



கட்டளைப் பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படும் ஊக்குவிப்பு முறை எது?

1. இலாப ஊக்குவிப்பு
2. பொருள்கள் ஊக்குவிப்பு
3. கட்டளையுடனான ஊக்குவிப்பு
4. கலாச்சார ரீதியான ஊக்குவிப்பு
5. மரபு மற்றும் மானிய ஊக்குவிப்பு



**தொகுப்பு** : திரு.E.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சோசலிச சந்தைப் பொருளாதாரத்திற்கு சிறந்த உதாரணமாகக் கருதப்படக்கூடிய தொகுதி பின்வருவனவற்றுள் எது?

1. சீனா, இலங்கை, பூட்டான்
2. ஜேர்மனி, அவுஸ்திரேலியா, பல்கேரியா
3. வடகொரியா, இந்தியா, ஜேர்மனி
4. சீனா, பல்கேரியா, கங்கேரி
5. வடகொரியா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா



திட்டமிட்ட பொருளாதாரத்தில் யாருக்கு உற்பத்தி செய்வது? என்ற வினா பிரதானமாக

1. போட்டிச் சந்தைகளில் வருமான கொடுப்பனவுகளுக்காக சாதனங்களின் விற்பனையால்
2. சமூக வழக்காறுகளைக் கையாண்டு சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு உற்பத்தியைப் பங்கீடு செய்வதனூடாக
3. குறைந்த வருமானம் உழைப்போருக்கு பொருட்களையும் சேவைகளையும் விலைகளையும் அரசாங்கம் தானே நிர்ணயிப்பதனூடாக
4. அரசாங்கம் பொருளாதாரத் திட்டமொன்றின் அங்கமாக வேதனங்களையும் விலைகளையும் தானே நிர்ணயிப்பதனூடாக
5. தொழில் கொள்வோருக்கும் தொழில் வழங்குநருக்குமிடையே பேரம் பேசலினூடாக





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk